பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 21 | வியாழக்கிழமை | 07.11.2024 | அதிர்வு 97

## சந்திரிகாவின் பாதுகாப்பு குறைக்கப்படவேயில்லை



### அரசு அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்குரிய பாதுகாப்பு குறைக்கப்படவில்லை 05

# சமஷ்டிக்கு இடமளியோம்!

## அநுர அரசு திட்டவட்டம்

"சமஷ்டி அரசமைப்புக்கும் ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் எமது ஆட்சியில் ஒரு போதும் இடமளியோம்."

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார். 05



## பாடசாலை மாணவர்களைத் தாக்கிய மூன்று இராணுவச் சிப்பாய்கள் கைது!



பாடசாலை மாணவர்கள் இருவரைத் தாக்கிச் சித்திரவதை செய்தனர் எனக் கூறப்படும் மூன்று இராணுவச் சிப்பாய்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை, பல்லேபொல பிரதேசத்தில் உள்ள 05




தங்கள் மண்ணையும் நகரத்தையும் காப்பதற்காக அதிகம் போராடி வருபவர்கள் மன்னார் மக்கள் என்று கூறினால் அது மிகையாகாது.

காற்றாடி மின் உற்பத்தி திட்டத்திற்காக நில சுவீகரிப்பு, கனிய மணல் அகழ்வு முயற்சி என்று பல்வேறு சூறையாடல்களுக்கு எதிராக மன்னாரில் பொதுமக்களும் அவர்களின் அமைப்புகளும் இணைந்து 05









# முடிவுக்கு வருகின்றது சுமந்திரனின் அரசியல்

## அவர் அமைதியான முறையில் விடைபெறுவதுதான் பொருத்தம் என்று கஜேந்திரகுமார் நேற்று தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"இது எம்.ஏ.சுமந்திரனின் அரசியல் முடிவுக்கு வருகின்ற கால கட்டம். எனவே, அவர் அமைதியான முறையிலே அரசியலை விட்டுப் போவதுதான் பொருத்தம்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பில், எம்.ஏ.சுமந்திரன் தனது பெயரைத் தவிர்த்து முழுந்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தமது தேர்தல் பரப்புரையை மேற்கொள்ளட்டும் என்று சவால் விடுத்துள்ளாரே என ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுமந்திரன்தான் எனது பெயரை இழுத்துக் கருத்துக்கள் தெரிவித்திருக்கின்றார். நான் அவரது பெயரை வலியுறுத்துவதைக் கன காலமாகத் தவிர்த்து வந்துள்ளேன். இது எம்.ஏ.சுமந்திரனின் அரசியல் முடிவுக்கு வருகின்ற கால கட்டம். எனவே, அவர் அமைதியான முறையிலே அரசியலை விட்டுப் போவதுதான் பொருத்தம்.

தனிநபர் சுமந்திரனைப் பற்றி சொல்ல வேண்டிய எந்தத் தேவையும் கிடையாது. ஆனால், உண்மை என்னவெனில் அவரது அரசியல் மிக மோசமான அரசியலாக கடந்த 15 வருடங்களாக இருந்திருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியலுக்கு அவரது செயற்பாடுகள் பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரக் கூடிய சூழல் கடந்த 15 வருடங்களாக இருந்திருக்கின்றது. அதிலிருந்து தமிழ் மக்கள் தப்பினது தெற்கில் நடந்த சில குழப்பங்களால்தான்.

தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்குரிய இணக்க அரசியலை சம்பந்தனும் சுமந்திரனும் செய்வதற்குத் தயாராக இருந்தாலும் கூட தெற்கிலே இருந்த அரசியல் நிலைமைகள் அதைக் குழப்பியது.

2015 இல் மிக மோசமான ஏக்கிய இராட்சிய என்ற இடைக் கால அறிக்கையில் மைத்திரிபால சிறிசேனவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலே இருந்த கருத்து வேறுபாடுகள் போட்டித் தன்மை காரணமாக அதனை ஒரு நிறைவுக்குக் கொண்டு போக முடியவில்லை. அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களாக் கொண்ட ஓர் அமைப்பாக இருந்து அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருந்தார்கள்.

எழுத்து மூலமாகக் கூட தமது ஒப்புதலைக் கொடுத்திருந்தார்கள். இது ஒரு சிங்கள பௌத்த நாடாக மாற்றியமைக்கத் தாம் எதிர்ப்பல்ல என்பதை எழுத்து மூலமாகக் கொடுத்திருந்தார்கள். மோசமான செயற்பாடுகளை அம்பலப்படுத்திச் சட்டம் தெரியாத சாதாரண மக்களுக்கு அதனைத் தெளிவுபடுத்த வேண்டிய கடமை எம்மிடம் இருக்கின்றது. அதை நாம் தொடர்ந்தும் செய்வோம்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனிப்பெரும் கட்சியாக வரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. வடக்கு, கிழக்கில் 18 தமிழ்ப் பிரதிநிதித்துவத்தில் 10 ஆசனங்களை முன்னணிக்கு மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

ஜே.வி.பி. தலைமையிலான புதிய அரசு நாடாளுமன்றத் தேர்தலின் பின், 2015 புதிய அரசமைப்பின் இடைக் கால வரைபை நிறைவேற்றுவதனூடாக தமழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக அறிவித்துள்ளது.

ஜே.வி.பி. இடைக்கால அறிக்கையை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளதெனில் அது எவ்வாறானதாக இருக்கும் என்று மக்கள் சிந்திக்க வேண்டும். மோசமான பிற்போக்குவாத இடைக்கால அறிக்கையைத் தயாரித்து தமிழ் மக்களின் ஆணையோடு நிறைவேற்றத் தமிழ்த் தரப்பு முண்டியடிக்கின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைத்தால் பேசச் செல்வோம். ஆனால், இடைக்கால வரைபை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இந்த அடிப்படையில் நாம் செல்லமாட்டோம். சமஷ்டி தொடர்பாக – தமிழ் மக்களின் தீர்வு விடயமாக இருந்தால் நிச்சயமாகச் செல்வோம்.

இதனை நாம் எம்மை சந்தித்த அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடமும் தெரிவித்துள்ளோம்." – என்றார்.




# 13 முதல் 17 ஆம் திகதி வரையில் பாடசாலைகள் இயங்க மாட்டா!

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு ஆதிகரப்பூர்வமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகள் 13 ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும் 18 ஆம் திகதியர்ர் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகள் 12 ஆம் திகதி பாடசாலை நிறைவடைந்ததும் தேர்தல் பணிக்காக ஒப்படைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்காக 13, 14 ஆம் திகதிகளில் பாடசாலைகள் மூடப்படும். 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினம். 16,17 ஆம் திகதிகள் சனி,ஞாயிறு விடுமுறை நாள்களாகும்.

# முன்னாள் ஆளுநர் மனைவியின் பெயரில் அ’புரத்தில் கையகப்படுத்தப்பட்ட காணி!

## இப்போது வெளிவரும் உண்மை



வடமத்திய மாகாண முன்னாள் ஆளுநர் மஹீபால ஹேரத் தனது பதவிக் காலத்தில் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து அவருடைய மனைவியின் பெயரில் அநுராதபுரம் லேக் ரிசர்வ் பகுதியில் 40 பேர்ச்சஸ் பெறுமதியான காணியைக் கையகப்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தக் காணி, அநுராதபுரம் மத்திய நுவரகம் மாகாண பிரதேச செயலகத்திற்குட்பட்ட கட்டுகெலியாவ கிராம உத்தியோகத்தர் இலக்கம் 302க்குட்பட்ட பெரமியங்குளம் காப்புப் பகுதியில் அமைந்துள்ளது.

மஹீபால ஹேரத் வடமத்திய மாகாண ஆளுநராக கடமையாற்றிய காலப்பகுதியில் அநுராதபுரம் மத்திய நுவரகம் மாகாண பிராந்திய செயலகப் பிரிவின் கல்கடவல, மஹிலா மாவத்தை, கட்டுகெலியாவ கிராமத்தில் ஏரி காப்புக் கோட்டிற்குட்பட்ட பகுதியில் 80 பேர்ச்சஸ் அளவிலான காணியை தனது மனைவி பெயரில் கையகப்படுத்தியிருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வடமத்திய மாகாண வர்த்தக சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகம் பீ.பி.திஸாநாயக்க –

“கேகாலை, இரத்னகிரி, மொலமுரே மாவத்தை, இலக்கம் 76இல் வசிக்கும் அஜந்தா ரூபசாரி ஹேரத் என்ற 77 வயதுடைய பெண் ஒருவர், பெரமியங்குளம் ஏரி காப்புப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் காணியை சுவீகரிப்பதற்கு மத்திய நுவரகம் மாகாண செயலகத்தில் விண்ணப்பம் செய்துள்ளார்.

இந்த பெண்ணிடம் விசாரணை நடத்திய போது, இந்த பெண் வடமத்திய மாகாண முன்னாள் ஆளுநர் மஹீபால ஹேரத்தின் மனைவி எனத் தெரியவந்துள்ளது.

இந்த பெண் வணிக நோக்கத்திற்காக இந்த நிலத்தை கோரியிருக்கிறார்.

செயலாளரிடம் அளித்த விண்ணப்பம் முறையாக பூர்த்தி செய்யப்படவில்லை. விண்ணப்பப் படிவத்தில் அவர் எவ்வளவு காலமாக இங்கு வசிக்கிறார் என்பது குறிப்பிடப்படவில்லை.

மேலும், அந்த பெண் இந்த நிலத்தில் மேலும் 80 பேர்ச்சஸ்களை அடைத்து, வேலியையும் பயன்படுத்தியுள்ளார்.

இந்தக் காணிகள் சட்டவிரோதமான முறையில் கைமாறியமை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, வடமத்திய ஆளுநர் மற்றும் அனுராதபுரம் மாவட்டச் செயலாளர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் திஸாநாயக்க தெரிவித்தார்.

# அரச நிர்வாக சேவைகளில் ஆயிரத்து 200 வெற்றிடங்கள்

பொது நிர்வாக சேவை உள்ளிட்ட பல அரச நிர்வாக சேவைகளில் 1200 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுகின்றன என பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது நிர்வாக சேவை மற்றும் கணக்காய்வு சேவைகளிலேயே அதிக வெற்றிடங்கள் நிலவுகின்றன.

மேற்படி சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகள் தற்போது நிறைவடைந்துள்ளதுடன் பெறுபேறுகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பொறியியல் துறையிலும் 250-இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்த அனைத்து வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பை துரிதகதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடுமையான போராட்டங்களை நடத்தி வருகின்றமை தெரிந்த விடயம்தான்.

ஆளும் தரப்புகளுக்கும் அதிகார சக்திகளுக்கும் துணை போகும் அரசியல்வாதிகள் இந்தப் போராட்டங்கள் பக்கம் அதிகம் தலை வைத்து படுப்பதில்லை. அது குறித்து அவ்வப்போது மக்கள் அதிருப்தி, விசனம் தெரிவிப்பது பற்றிய செய்திகள் வெளியாவது உண்டு. இவ்விடயத்தில் தங்களின் பங்களிப்பை வழங்காமல் ஒளித்துப் பிடித்து விளையாடும் அரசியல்வாதிகள் குறித்து அவ்வப்போது செய்திகள் வெளியாகாமல் இருக்கவில்லை.

நேற்றும் மன்னாரில் கனிய மணல் அகழ்வு நடவடிக்கை தொடர்பான முயற்சி ஒன்றுக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். ஆனால் வழமைக்கு மாறாக அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளின் பிரசன்னம் அதிகமாக இருந்தது. தேர்தல் காலம் என்பதால் வாக்குச் சுவீகரிப்பு இலக்குடன் எல்லோரும் அங்கு சமுகம் தந்திருந்தமையைக் காண முடிந்தது. ஆயினும் வழமையாகப் போராட்டம் நடத்துகின்ற பொது அமைப்பினர், அங்கு வந்த அரசியல்வாதிகளைத் தள்ளி நிக்கும் படி உரிமையோடு கேட்டுக் கொண்டார்கள். அப்பகுதிக்கு வந்த உதவித் தேர்தல் அதிகாரியும் அதே விடயத்தை வேட்பாளர்களுக்கு சுட்டி காட்டி அவர்களைப் போராட்டத்தில் இருந்து தள்ளி நிற்கப் பணித்தார்.

பொது மக்களின் நலனுக்கான இத்தகைய போராட்டங்களில் வழமையாக ஈடுபடாத அரசியல்வாதிகள் தேர்தல் சமயம் என்றதும் விழுந்தடித்துத் தலையை நீட்டுகிறார்கள். இதுதான் அவர்களின் சின்னத்தனம்...!

\+ \+ \+

கொழும்பு இரத்மலானைப் பகுதியிலுள்ள கழிவுநீர் வாய்க்கால் ஒன்று நேற்றுத் திடீரென இரத்தச் சிவப்பு நிறத்திற்கு மாறியதால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

எனினும் மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்தின் அதிகாரிகள் விரைந்து, அந்த நீரில் மாதிரிகளைப் பரிசோதனை செய்தனர். மோசமான நிலை எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவித்த அவர்கள், அந்த விவகாரம் குறித்து மக்கள் பதற்றப்படத் தேவையில்லை என்றும் தெரிவித்தனர்.

அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சிவப்பு நிற 'டை' மழை நீரில் அள்ளுப்பட்டுக் கரைந்து வாய்க்காலுக்குள் வந்ததுதான் வாய்க்கால் ரத்தச் சிவப்பானதற்கான காரணம்.





## இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியின் செயலாளருடன் சந்திப்பு

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரு பெற்றிக் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் மேலும் வலுவாகத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்ப்பதாகப் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தப் பிரித்தானிய அரசாங்கம் பாராட்டுவதாகவும், ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான உதவிகளை வழங்கத் தயாரெனவும் அன்ட்ரு பெற்றிக் உறுதியளித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் பிரித்தானியாவில் காணப்படும் முறைமை முக்கியமானது என்றும், அந்த முறையில் ஊழல் மோசடிகளை மட்டுப்படுத்த முடியும் என்றும் சுட்டிக் காட்டிய பிரித்தானிய உயர்ஸ்தானிகர், பிரித்தானிய நாடாளுமன்ற முறைமைகள் குறித்து இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களை தெளிவூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்றும் வலியுறுத்தினார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சமஷ்டிக்கு இட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்புநேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இதில், பங்கேற்ற செய்தியாளர் ஒருவர், சமஷ்டி அரசமைப்பை ஏற்படுத்த வேண்டும்,ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையில் அநுர அரசுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்கவுள்ளது என்றும், இது தொடர்பில் அநுர அரசுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சி பேச்சு நடத்தியுள்ளது என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கூறியுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத், "சமஷ்டி அரசமைப்பையோ அல்லது ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவோ எமது ஆட்சியில் இடமில்லை. அத்துடன், ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் பேச்சு எதனையும் நடத்தவும் இல்லை." – என்றும் கூறினார்.

## சந்திரிகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

தனக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது எனச் சந்திரிகா தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

"முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது, அதில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை." – என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## பாடசாலை மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பாடசாலையொன்றில் தரம் 11 இல் கல்வி கற்கும் இரண்டு மாணவர்களே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவரது சகோதரனுக்கும் தாக்குதலுக்குள்ளான மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# காலிமுகத் திடலை விடுவிக்க அமைச்சரவை அங்கீகாரம்

காலிமுகத் திடல் மைதானத்தை பல்வேறு சமூக செயற்பாடுகளுக்காக மீள வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காலிமுகத் திடல் மைதானத்தை சமூக செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்காதிருக்க கடந்த வருடம் ஏப்ரல் 17ஆம் திகதியன்று அப்போதைய அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

காலிமுகத் திடல் மைதானத்தின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மாதாந்தம் சுமார் 2.5 – 3 மில்லியன் ரூபா வரை செலவாகுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி தொகையை ஈடு செய்வதற்காக புதிய தீர்மானத்தை எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# விசேட வைத்திய நிபுணர் சாஃபி சஹாப்தீன் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிப்பு



சுமார் 4000 சிங்கள பௌத்த தாய்மார்களுக்கு கருத்தடை செய்தார் என குற்றஞ்சுமத்தப்பட்டிருந்த குருணாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஷஹாப்தீன் மொஹமட் ஷாஃபியை அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிப்பதற்கு குருணாகல் பிரதம நீதவான் பந்துல குணரத்ன நேற்று உத்தரவிட்டார்.

வைத்தியருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறியமை மற்றும் வழக்கைத் தக்கவைக்க போதுமான உண்மைகள் இல்லாததால் சட்ட மாஅதிபரின் ஆலோசனையின் பிரகாரம் அவரை விடுவிப்பதாக நீதவான் குறிப்பிட்டார்.

சிசேரியன் சத்திரசிகிச்சையின் மூலம் பெருமளவான பெண்களை மலட்டுத்தன்மையடையச் செய்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசேட வைத்திய நிபுணர்களின் அறிக்கைகளின் பிரகாரம், பிரதிவாதியான வைத்தியரின் சத்திரசிகிச்சையால் அவர்கள் மலட்டுத்தன்மைக்கு ஆளானார்கள் என்பதற்கு போதிய ஆதாரம் இல்லை என நீதவானின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட வைத்தியர் மீது 768 பெண்கள் முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

இந்த விடயம் குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் மேற்கொண்ட விசாரணையின் போது, வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் உள்ளிட்ட சுமார் 138 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

சட்டத்தரணி மைத்திரி குணரத்ன உள்ளிட்ட சட்டத்தரணிகள் விசேட வைத்திய நிபுணர் சாஃபி சார்பில் ஆஜராகினர்.

# நித்திரையில் குளவி கொட்டுக்கு இலக்காகிய இளைஞர் மரணம்!



யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார் .

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:–

இந்த இளஞர் நேற்று முன்தினம் இரவு தனது வாகனத்தில் நித்திரையில் இருந்த போது குளவி கொட்டியுள்ளது .

வலி தாங்கமுடியாமல் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இளைஞர் பரிதாபமாக நேற்று உயிரிழந்துள்ளார் .

சம்பவத்தில் 35 வயதான இளைஞரே உயிரிழந்திருக்கின்றார்.

சடலம் உடல் கூற்று சோதனையின் பின் உறவினர்களிடம்கையளிக்கப்பட்டுள்ளது இச் சம்பவம் அப்பகுதியில் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

# யாழில் தெரிவாகும் 6 எம்.பிக்களும் ஓரணியாகச் செயற்பட வேண்டும்!

## அதற்கான கட்டமைப்பை என்னால் உருவாக்க முடியும் என சுயேச்சை வேட்பாளர் நாகரத்தினம் கமலரூபன் தெரிவிப்பு

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேர்தலின் பின்னர் மாவட்ட அபிவிருத்தி உள்ளிட்ட பொது விடயங்களில் ஓரணியாகச் சேர்ந்து செயற்பட வேண்டும். அதற்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஒரு சுயேச்சை வேட்பாளராக என்னால் முடியும்."

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட சுயேச்சைக் குழு 02 இன் நாடாளுமன்ற வேட்பாளர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் கமலரூபன் தெரிவித்தார்.

கனடா தமிழ் வண் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறினார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"கட்சிகள் குறிப்பாக பொருளாதார ரீதியிலான செயற்பாடுகளில் ஒருமித்துச் செயற்பட வேண்டும். கட்சிகள் தனித்தனியாகச் செயற்படும்போது ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. அவ்வாறு ஒருமித்துச் செயற்படுவதற்கு ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்திலியே நான் செயற்படுகின்றேன்.

இலங்கையைப் பொறுத்தவரைக்கும் பாரிய பொருளாதாரப் பிரச்சினை உள்ளது. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரைக்கும் பொருளாதாரப் பிரச்சினையும் உள்ளது, அரசியல் பிரச்சினையும் உள்ளது. இரண்டையும் சரியான பாதையில்




சம தளத்தில் கொண்டு செல்ல வேண்டும். கூறுவார்கள் பசியுடன் உள்ளவரிடம் ஒன்றும் பேச முடியாது என்று. ஆகவே, பொருளாதாரம், அரசியல் இரண்டையும் சரி சமனாகக் கொண்டு செல்ல வேண்டும்.

போருக்குப் பின்னரான 15 ஆண்டுகளும் எமது அரசியல் தலைவர்கள் அரசியல் தீர்வு நோக்கி மாத்திரமே பயணித்துள்ளனர். எவ்வித பொருளாதாரச் செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. எந்தவொரு குறைபாடு பிரதானமாகவுள்ளது என்ற அடிப்படையிலேயே எனது அரசியல் பிரவேசம் அமைந்துள்ளது." – என்றார்.

# வடக்கில் பலமிழந்து வருகின்றது தமிழரசு

## கம்மன்பில கண்டுபிடிப்பு

வடக்கில் தமது கட்சிக்கான ஆதரவு வீழ்ச்சியடைந்து வருவதால் அரசுடன் இணைந்து அதனைத் தக்கவைத்துக்கொள்வதற்குரிய தேவைப்பாடு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"மங்கள சமரவீரவுக்கும், சுமந்திரனுக்கும் நல்லுறவு இருந்தது. மங்கள ஜனாதிபதியாகி இருந்தால் சுமந்திரன் நிச்சயம் அமைச்சுப் பதவியை ஏற்றிருப்பார். இன்று மங்கள உயிருடன் இல்லை.

அடுத்தது சுமந்திரனுக்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் சிறந்த நட்பு உள்ளது. இருவரும் இணைந்து செயற்படக்கூடியவர்கள்.

1960 காலத்துக்குப் பின்னர் அவர்கள் (தமிழரசுக் கட்சி) அரசில் அங்கம் வகிக்காததால் வடக்கில் அவர்களுக்குரிய



வாக்கு வங்கி வீழ்ச்சியடைந்து வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 2015 இல் 16 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன. 2020 இல் அந்த எண்ணிக்கை 10 ஆகக் குறைந்தது. எனவே, அவர்களின் இருப்பு வீழ்ச்சியடைந்து வருகின்றது.

எனவே, அரச பலம் மூலம் அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்குரிய தேவைப்பாடு அவர்களுக்கு உள்ளது." – என்றார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2024

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்."

**- பிராங்க் லோயிட் றைற்**
**(அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)**



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலும் மைத்திரியும்

அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதி தம்முடைய பதவிக் காலத்தில் செய்த அல்லது செய்யத் தவறிய நடவடிக்கைகளுக்காக நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்க வேண்டி இருக்கும் என்பதை பல சமயங்களில் அதிகாரத்தில் இருக்கும்போது அவர்கள் கவனத்தில் கொள்வதில்லை.

இதுவரை அதிகாரத்திலிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் விட்டேத்தியாக செயற்பட்டு வருகின்றார் என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்தோம்.

அதிகாரத்தில் இருக்கும்போது நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொள்ளும் கடப்பாடு இல்லாவிட்டாலும், பதவியை விட்டு இறங்கியதும், அந்தத் தவறுகளுக்கு எல்லாம் நீதிமன்ற விடயங்களை - விசாரணைகளை - எதிர்கொள்ள வேண்டி நேரம் என்று சுட்டிக்காட்டி வந்தோம்.

இப்போது ரணில் விக்கிரமசிங்க அவற்றை எதிர்கொள்ளத் தொடங்கி இருக்கிறார்.

ஏற்கனவே, முறையற்ற விதத்தில் தேசபந்துதென்னக்கோனைபொலிஸ்மா அதிபராக நியமித்தமைக்கு எதிரான வழக்கில் உயர் நீதிமன்றம் அவரை எதிராளியாகப் புதிதாகச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்திருந்தது.

பாஸ்போர்ட் சுவீகரிப்பு தொடர்பான ஒரு வழக்கில் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அவரை எதிர்மனுதாரராகச் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கி இருக்கின்றது.

பதவியை விட்டு இறங்கிய ரணில் விக்கிரமசிங்க, இனித் தமது பதவிக் காலத்தில் இடம்பெற்ற சர்ச்சைகள், பிணக்குகள் தொடர்பான வழக்குகளில் எதிராளியாகத் தோற்ற வேண்டிய சிக்கல் கூடி வருகின்றது.

இதில் ஒரு முக்கிய விடயம் கவனிக்கப்படவேண்டும்.1978ஆம்ஆண்டுநிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை அறிமுகப்படுத்தும் அரசமைப்புக்கொண்டுவரப்பட்டபோது அதில் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு கட்டுமட்டற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

அவர் ஜனாதிபதிப் பதவியில் இருந்த சமயம் இழைத்த அல்லது இழைக்கத் தவறிய ஒரு குற்றத்திற்காக அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எதுவும் தொடுக்கப்பட முடியாது என்ற ஏற்பாடு வலிமையாக இடம்பெற்றிருந்த.

ஆனால் அந்த சட்ட விலக்களிப்பு முறைமையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை கொண்ட நல்லாட்சி அரசே ரத்து செய்து, ஜனாதிபதிகள் தாமிழைத்த அல்லது இழைக்கத் தவறிய குற்றங்களுக்காக சட்டத்தையும் நீதிமன்றத்தையும் எதிர்கொள்ளும் முறைமையை 19 ஆவது அரசமைப்பு திருத்தம் மூலம் கொண்டு வந்தது.

அப்படிஅவர்கள்இருவரும்சேர்ந்து கொண்டு வந்த அந்தச் சட்டத் திருத்தத்தின் கீழ் இப்போது அதிகம் சட்ட நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ஜனாதிபதிகள் அவர்கள் இருவரும் தான் - மைத்திரிபால சிறிசேனவும் ரணிலும்தான் என்பது இதில் துரதிஷ்டமான விடயமாகும்.

19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட பின்னர், முறையற்ற விதத்தில் 52 நாள்களுக்கு பின் கதவால் மஹிந்த ராஜபக்ஷ அரசை அதிகாரத்துக்கு கொண்டு வந்த தவறுக்காக நீதிமன்றக் கண்டனத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்கொண்டார்.

அன்று தொட்டு அவர் நீதிமன்ற நெருக்கடிகளை தொடர்ந்து எதிர்கொண்டு வருகின்றார். இப்போது அந்த வரிசையில் ஜனாதிபதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் ஏற்பாட்டை கொண்டு வந்த ரணில் விக்கிரமசிங்கவிம் சேர்ந்து கொண்டு உள்ளார்.

தாங்கள் கொண்டு வந்த முக்கிய சட்ட திருத்தத்தின் காரணமாக அவர்கள் இருவருமே முதலில் நெருக்கடிகளை எதிர்கொள்வது துரதிஷ்டவசமானது.



# கூட்டணி கட்சித் தலைவர்களை விமர்சிக்காதீர் அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு இ.பி.எஸ். அறிவுரை

தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் குறித்து அ.தி.மு.க. நிர்வாகிகள் யாரும் விமர்சிக்க வேண்டாம் என்று சென்னையில் நேற்று நடைபெற்ற அ,தி,மு,க, மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார்.

அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிற மாநிலச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்க வந்த கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு கட்சித் தொண்டர்களும், நிர்வாகிகளும் உற்சாக வரவேற்பளித்தனர். பின்னர் வளாகத்தில் உள்ள எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா சிலைகளுக்கு பழனிசாமி மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பழனிசாமி பங்கேற்று, மாவட்டம்தோறும் நடைபெறும் உறுப்பினர் சேர்க்கை மற்றும் அதிக அளவில் இளைஞர்களை கட்சிக்குள் சேர்ப்பது, அவர்களுக்கு பொறுப்புகள் வழங்குவது, தற்போது அ.தி.மு.க. மீது மக்களின் மனநிலை எப்படி இருக்கிறது என்பன உள்ளிட்டவை குறித்து மாவட்டச் செயலாளர்களிடம் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "ஒவ்வொரு மாவட்டத்திலும் உறுப்பினர் சேர்க்கை குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். அதில் மந்தநிலை தென்பட்டால் மாவட்டச் செயலாளர் மீது நடவடிக்கை பாயும். அதை மனதில் வைத்து மாவட்டச் செயலாளர்கள் செயல்பட வேண்டும். விரைவில் உட்கட்சித் தேர்தல் நடைபெற உள்ளது. அதற்காக கட்சி நிர்வாகிகள் தயாராக வேண்டும். அதனைத் தொடர்ந்து பொதுக்குழு நடத்துவது குறித்து முடிவெடுக்கப்படும்.

தற்போது அரசியல் சூழல் மாறி வருகிறது. தேர்தல் நேரத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். அதனால் தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் குறித்து அ.தி.மு.க. நிர்வாகிகள் யாரும் விமர்சிக்க வேண்டாம். தி.மு.க. ஆட்சியில் நடந்து வரும் கொலை, கொள்ளை, திருட்டு சம்பவங்கள் உள்ளிட்ட மக்கள் விரோத நடவடிக்கைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் பணிகளை மாவட்ட செயலாளர்கள் தீவிரப்படுத்த வேண்டும்" - என்றார்.

# நடிகை கஸ்தூரி, யூடியூப் சேனல் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு



தமிழ் திரைப்பட நடிகை கஸ்தூரி அண்மையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போது, தெலுங்கு பேசும் மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசினார்.

அவரது இந்தப் பேச்சுக்கு தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, தெலுங்கானாவிலும் கடும் கண்டனங்கள் குவிந்தன. தமிழக பா.ஜ.கவும் நடிகை கஸ்தூரியின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னை, மதுரை உள்ளிட்ட பல இடங்களில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர். இதற்கிடையே நடிகை கஸ்தூரி தனது பேச்சுக்கு மன்னிப்புக் கோரினார். ஆனால் நடிகை கஸ்தூரி மீது மாநிலம் முழுவதும் தொடர்ந்து பல்வேறு பொலிஸ் நிலையங்களில் புகார் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருச்சி, வயலூர் சாலை, சீதாநகரைச் சேர்ந்த ரெட்டி நலச்சங்கம் செயலாளர் செல்வராஜ் என்பவர் திருச்சி மாநகர குற்றப்பிரிவு பொலிஸாரிடம் ஒரு புகார் மனு அளித்துள்ளார்.

அதில், "நடிகை கஸ்தூரி தெலுங்கு மக்கள் குறித்து ஆபாசமாகவும், மக்களிடையே பிளவு ஏற்படுத்தும் வகையிலும், பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பேசியதை நம் தேசம் பாரத் என்ற யூ-டியூப் சேனலில் பார்த்தேன். இதை பார்த்ததிலிருந்து நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். எனவே நடிகை கஸ்தூரி, அவரது பேச்சை ஒளிபரப்பிய யூடியூப் சேனல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுகுறித்து மாநகர குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் அன்புச்செல்வன், நடிகை கஸ்தூரி மற்றும் அவரது பேச்சை ஒளிபரப்பிய நம் தேசம் பாரத் யூடியூப் சேனல் மீதும் 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



# பாதுகாப்பு அமைச்சரை உடனடியாக பதவி நீக்கினார் இஸ்ரேலிய பிரதமர்

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கெல்லன்டை அதிரடியாக பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார் அந்நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு. அவரது செயல்பாடுகள் மீது நம்பிக்கை இல்லாததால் பதவி நீக்கம் செய்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நெதன்யாகு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“கடந்த சில மாதங்களில் நம்பிக்கை இழந்துவிட்டேன். இதனால் தற்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சரை அப்பதவியில் இருந்து நீக்க முடிவு செய்துள்ளேன்” என்று கூறப்பட்டுள்ளது. இது இஸ்ரேல் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காசாவில் ஒரு வருடத்திற்கும் மேலாக நடந்த போரில் 43,300 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என காசா அதிகாரிகள் கூறுகின்றனர். மேலும் பெரும்பாலான பகுதிகள் இடிபாடுகளாக மாறிவிட்டன.

ஒக்டோபர் 7, 2023 அன்று ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலைத் தாக்கி, சுமார் 1,200 பேரைக் கொன்று, 251 பணயக்கைதிகளை காசாவிற்கு அழைத்துச் சென்றனர். இதைத் தொடர்ந்து போர் தொடங்கியது.

இதன் நீட்சியாக தற்போது லெபனான் எல்லைக்குள் உள்ள ஈரானிய ஆதரவு கொண்ட ஹிஸ்புல்லாக்களை அழிப்போம் என்று இஸ்ரேல் சூளுரைத்து நடவடிக்கையில் இறங்கியது. இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை லெபனானில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3,002 ஆகவும், காயமடைந்தோர் எண்ணிக்கை 13,492 ஆகவும் உள்ளது.

காசா, லெபனான் என இரு முனைகளில் இஸ்ரேல் ராணுவம் முழுவீச்சில் தாக்குதல் நடத்திவரும் சூழலில் பாதுகாப்பு அமைச்சரை யோவ் கெல்லன்டை பிரதமர் பதவி நீக்கம் செய்துள்ளார்.

யோவ் கெல்லன்டுக்கு பதிலாக தற்போது வெளியுறவுத் துறை அமைச்சராக உள்ள இஸ்ரல் காட்ஸ் பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பதவியேற்பார் என்று தெரிகிறது. கிடியோன் சார் என்பவர் இஸ்ரேல் நாட்டின் புதிய வெளியுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவி நீக்கம் குறித்து யோவ் கெலான்ட் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், “இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதே என் வாழ்வின் முக்கிய பணியாக இருந்தது.. இனிமேலும் அதுவே தான் இருக்கும்” என்று உருக்கமாகப் பதிவிட்டுள்ளார்.



# நண்பர் டொனால்ட் ட்ரம்ப்புக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி!

## பிரதமர் மோடி வாழ்த்து

அமெரிக்க ஜனாதிபதி  தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டொனால்ட் ட்ரம்புக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான விரிவான, உலகளாவிய, உத்திசார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த ஆவலுடன் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இது குறித்து நேற்று எக்ஸ் தளத்தில் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில்,

“வரலாற்று சிறப்புமிக்க தேர்தல் வெற்றிக்கு எனது நண்பர் டொனால்ட் ட்ரம்புக்கு மனமார்ந்த வாழ்த்துகள். உங்களது முந்தைய பதவிக்காலத்தின் சிறப்புகளை நீங்கள் மீண்டும் செயல்படுத்தும்போது, இந்தியா – அமெரிக்கா இடையேயான விரிவான உலகளாவிய, உத்திசார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதை நான் எதிர்பார்க்கிறேன்.

நமது மக்களின் முன்னேற்றத்துக்காகவும், உலகளாவிய அமைதி, ஸ்திரத்தன்மை, செழிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகவும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.



# இஸ்ரேலிய விமானங்களின் தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் மற்றுமொரு தளபதி பலி

இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று தெற்கு லெபனானில் கியாம் பிராந்தியத்தில் நடத்திய தாக்குதலில், ஹிஸ்புல்லாவின் தளபதி கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஹுசைன் அப்துல் ஹலீம் ஹார்ப் என்ற தளபதியே கொல்லப்பட்டவராவார். கொல்லப்பட்ட ஹார்ப், இஸ்ரேலின் கலிலேயா பகுதியில் குடியிருப்புகளை குறிவைத்து பல ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியவர் என்று இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில், இஸ்ரேலிய விமானப்படை லெபனான் மற்றும் காசா பகுதியில் சுமார் 70 தாக்குதல்களை நடத்தியுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

லெபனானில், தரைப்படைகள் வான்வழித் தாக்குதல்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தியதால் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதே சமயம் காசாவில், இஸ்ரேலிய வீரர்கள் பலரை கொன்றதாகவும், அவர்கள் ஹமாஸ் அமைப்பினர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகிறது.









# யாழ்.பிரசாரக் கூட்டத்தில் ராஜிதவின் மகன் பங்கேற்பு

(பிரபாகரன் டிலக்சன்)

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம், கோப்பாய் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சத்துர சேனாரத்ன, அந்தக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சுலக்சன், சக வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.
















# சமஷ்டித் தீர்வுக்கு முயல்வோம் என்கிறார் ஐ.தே.கவின் யாழ். தலைமை வேட்பாளர்

(பிரபாகரன் டிலக்சன்)

சமஷ்டி முறையிலான தீர்வே தமிழர்களுக்கு அவசியம். அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியை நாடாளுமன்றில் முன்னெடுப்போம் என ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் – கிளிநொச்சி மாவட்ட பிரதான அமைப்பாளரும், யாழ் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான டேவிட் நவரட்ணராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் கால அலுவலகத்தை நேற்று மாலை திறந்துவைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

ஐ.தே.கவிலிருந்து விலகியவர்கள் மீண்டும் கட்சியில் இணைந்து கட்சியை பலப்படுத்த வேண்டும். தமிழ் மக்களுடைய நம்பிக்கையை வென்றது யானைச் சின்னமே. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணி வைத்ததால் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டோம். தற்போது யாழ்ப்பாணம், வன்னி, மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றோம்.




நாடாளுமன்றத் தேர்தலில் பல கட்சிகள் போட்டியிடுகின்றன. நாடு வங்குரோத்தான போது ஓடி ஒழிந்தவர்கள் இன்று தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்களுக்கு என்ன அருகதை உள்ளது? ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பெடுத்து குறுகிய காலத்திலேயே மேம்படுத்தினார்.

தற்போது எமது இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் போதைப் பொருளுக்கு அடிமையாகின்றனர். நாங்கள் அவர்களை மீட்டு அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை வழங்குவோம். விவசாயம், மீன்பிடி என்பவற்றை நவீனப்படுத்துவோம்.

கடந்த அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்தில் நினைவேந்தல்களுக்கான உரிமை மறுக்கப்பட்டது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் சுதந்திரமான முறையில் நினைவேந்தல்களை மேற்கொள்ளக்கூடிய அமைதியான சூழல் காணப்பட்டது.

சமஷ்டி முறையிலான தீர்வே தமிழர்களுக்கு அவசியம். அதனை பெற்றுக் கொடுப்பதற்காக முயற்சியை நாடாளுமன்றில் முன்னெடுப்போம். – என்றார்.

# ஐ.தே.க. யாழ். தேர்தல் பணிமனை பலாலி வீதி, கந்தர்மடத்தில் திறப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

ஐக்கிய தேசிய கட்சியின் யாழ் தேர்தல் மாவட்ட தலைமைக் காரியாலயம் பலாலி வீதி, கந்தர்மடம் பகுதியில் நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

காரியாலயத்தினை முதன்மை வேட்பாளரும் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ் – கிளிநொச்சி மாவட்ட பிரதான அமைப்பாளர் டேவிட் நவரட்ணராஜ் மற்றும் சக வேட்பாளர்கள் இணைந்து திறந்து வைத்தார்கள்.





# ஆசிரியர் மரணம்

(எஸ்.கீதபொன்கலன்)

புல்மோட்டை மத்திய கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றி வந்த நற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட நூ/ஹ லெப்பை மொகமட் முபீஸ் (வயது 28) நேற்று மாலை அவர் தங்கியிருந்த அறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மரணத்திற்கான காரணம் அறியப்படவில்லை.



மேலதிக விசாரணைகளை புல்மோட்டைபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கந்தன் திருவடி என்றும் துணையே!

( கந்தசஷ்டி 6ஆம் நாள் )

சந்ததும் கந்தன் புகழ் பாடு
சஞ்சலங்கள் போக்கிடுவான் கந்தன்
வந்த வினை ஓடிடுமே நாளும்
வாராது வினை எம்மை நாடி

சொந்தம் எனக் கந்தனை நீ நம்பு
சுகமுன்னை நாடி வரும் என்றும்
அந்தகனும் நமை நாடி வாரான்
கந்தனுமே கை கொடுப்பான் என்றும்

வேலை நினைத்தால் வெற்றி நிச்சயம்
வேலன் வருவான் காலைப் பிடிப்போம்
காலைப் பிடித்தால் கவலைகள் கலையும்
கந்தன் திருவடி என்றும் துணையே!

*மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,*
*மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,*
*மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.*




# “சான்றோரும் உண்டு கொல்?”

உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சமுதாயத்தை வழி நடத்துவதில் பலருக்கும் பங்கிருக்கிறது. நாம் அந்தப் பொறுப்பை அரசியல்வாதிகளின் கையில் தூக்கிக் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருக்கப் பார்க்கிறோம். நம் நிம்மதி கெட்டுப் போனதற்கு அதுதான் முதற் காரணம்.

பிழையாகக் குற்றஞ்சாட்டி, கோவலனைக் கொன்று விட்டார்கள் என்பதை அறிந்த கண்ணகி, கையில் ஒற்றைச் சிலம்புடன் மதுரையை நோக்கி ஓடி வருகிறாள். அப்பொழுது அவள், “சான்றோரும் உண்டு கொல்?”, “சான்றோரும் உண்டு கொல்?” எனக் கேட்டபடிதான் வந்ததாய் இளங்கோவடிகள் பாடுகிறார்.

‘அரசன் செய்த பிழைக்கு, அந் நாட்டுச் சான்றோர்களின் மேல் கண்ணகி குற்றம் சாட்டியமை முறையாகுமா?’ கேள்வி எழும்.

ஒரு சமுதாயத்தை வழிநடத்துவதில் முக்கிய பொறுப்பு, அரசரைவிட அந் நாட்டுச் சான்றோர்க்கே உரியதாம். அதனால்தான் கண்ணகி அங்ஙனம் கேட்டு வந்ததாய் இளங்கோவடிகள் பாடினார்.

எங்கள் நாட்டில் நடந்த, நடக்கின்ற பிழையும் இதுதான். கற்றவர்கள், நடுநிலையாளர்கள், ஆன்மீக வாதிகள், சமூகத் தொண்டர்கள், இலக்கிய வாதிகள் எனச் சான்றோர் வரிசையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய பலர் நம் இனத்திலும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் அவர்கள் நம் சமுதாயத்தில் என்ன நடந்தாலும் வாய் திறக்க மாட்டார்கள். கேட்டால் நாங்கள் இந்த விடயங்களில் தலையிடுவதில்லை என்பார்கள்.

அதனால்தான் நம்மினத்தை அரசியலாளர்கள் இந்தளவு மோசமான நிலைக்குக் கொண்டு வந்தார்கள். போர் நடந்து கொண்டிருந்தபோது, போராளிகள் நம்மவர்களை நோக்கி, “பார்வையாளர்களாய் இராமல், பங்காளிகளாய் வாருங்கள்!” எனக் கோரிக்கை வைத்தார்கள்.

மேற்சொன்ன சான்றோர்(?) பெருமக்கள், நம் சமுதாயத்தில் எப்போதும் வெறும் பார்வையாளர்கள்தான். அவர்கள் என்றைக்குமே பங்காளர் ஆனதில்லை. பிழைகள் நடந்த பிறகு, “கூட்டத்தில் கூடி நின்று கூடிப் பிதற்றல்’ செய்து, சந்திக்குச் சந்தி சதிராடி நிற்பார்கள் - வேடிக்கை மனிதர்கள்!

இவர்களால்தான் நம் சமுதாயம் சிதைந்து போய்க் கிடக்கிறது, நடக்கப் போகிற தேர்தலில் வரப்போகிற முடிவு, நம்மினத்துக்குச் சமாதி கட்டுகிற முடிவாக வந்தாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை. ஒன்றுபட்ட மாலையாக இருந்த நம் தலைவர்கள், தம் சுயநலத்தால் ஒற்றுமையைச் சிதைத்துச் சிதைத்து, இன்றைக்கு உதிரிப் பூக்களாகச் சிதறிக் கிடக்கின்றனர்.

அங்ஙனம் சிதறிக் கிடக்கும் பூக்களுக்குள் சில காகிதப் பூக்களும் வந்து கலந்து, தம்மையும் மலர்களாய் அங்கீகரிக்கும்படி கோரிக்கை வைத்து நிற்கின்றன. தெளிவில்லா எம் சமுதாயம், இவற்றையும் உண்மை மலர்களாய் அங்கீகரிக்கப் பார்க்கிறது. இவைதான் உண்மைப் பூக்கள்!, இவையெல்லாம் காகிதப் பூக்கள்! என இனங்காட்டி, மக்களை நெறி செய்ய வேண்டியவர்கள் மௌனித்து நிற்கிறார்கள். சமுதாயத்தை ஏமாற்ற நினைக்கும் பொய்ப் பூக்களைக் கண்டிப்பார் எவரும் இல்லாமல் போனதால், எம்மினம் ஆபத்தின் எல்லை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

நம் தமிழ்ப் பிரதேசங்களில் ஒன்றுக்கு நான்கு பல்கலைக் கழகங்கள், பல பேராசிரியர்கள். தம்மைச் சமயவாதிகள் எனச் சொல்லிக் கொள்வோர், இலக்கியவாதிகளாய்ப் புகழ்தேடி நிற்போர், சமூகத் தொண்டர்கள் எனச் சான்றோர் வரிசையில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய பலரும், தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் விடயம் பற்றி வாய்திறக்காமல் இருக்கிறார்கள்.

நம் கவிஞர் ‘மகாகவி’ எழுதியதுபோல், “தம் தொழில் பிறிதென்றாற்போல் தாடியை வருடி மீண்டார்” என நிற்கும் இவர்களுக்குச் சமூகம் தருகின்ற புகழ் வேண்டுமாம்! சமூகத்திற்கான பொறுப்புணர்ச்சி தேவையில்லையாம்! எப்படி உருப்படும் எம்மினம்?

எவரும் எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும் என்று இருக்க என்னால் முடியவில்லை. நான் என்னைச் சான்றோன் என்று சொல்ல வரவில்லை. ஆனால் எனது அறுபத்தேழு ஆண்டுகால ஆயுளில் நாற்பத்தைந்து ஆண்டுகளை இந்தச் சமூகத்தோடு கழித்திருக்கிறேன். அதனால் குழப்பமான

தொடர்ச்சி ▼

# "சான்றோரும் உண்டு கொல்?"

தொடர்ச்சி▲

நிலையில் இச் சமுதாயத்திற்கு வழிகாட்டுவதில் எனக்கும் பங்குண்டு என என் மனம் நினைக்கிறது. அதனால், வரப்போகிற தேர்தல் பற்றிச் சில வழிகாட்டுதல்களை நம் மக்களுக்குச் செய்ய விரும்புகிறேன்.

நான் அறிந்தளவில் இம்முறை தேர்தலில் முகம் கொடுக்கும் தமிழர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் காகிதப் பூக்கள்தான். அவர்கள் குழம்பிக் கிடக்கும் சமுதாயக் குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறார்கள். பூக்களோடு போட்டியிட வந்திருக்கும் இக் காகிதப் பூக்களைக் கசக்கி எறிவதைத் தவிர வேறு வழியிருப்பதாய்த் தெரியவில்லை.

தேர்தலில் பங்கு கொள்வோரில் ஒரு சிலரை ஆளுமையாளர்களாய் நான் இனங்கண்டிருக்கிறேன். திருவாளர்கள் எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன், சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், டக்ளஸ் தேவானந்தா, சந்திரகுமார், சிவாஜிலிங்கம், மணிவண்ணன், சயந்தன் போன்றோர் அவர்களுள் சிலராவர். இவர்கள் பெரும்பாலும் வேறு வேறு கட்சிகளில் இணைந்து போட்டியிடுகிறார்கள். என்ன செய்வது விதியின் விளையாட்டு.

குறித்தவொரு கட்சிதான் தேர்வுக்குரியதாய் இருக்கவேண்டும் என்ற நிலையில், # நீண்ட காலப் பாரம்பரியமுள்ள, # உயர் தலைவர்களால் வழிப்படுத்தப்பட்ட, # மாற்றினத்தாராலும் மதிக்கப்படுகின்ற, ஈ இனப்பிரச்சனை சம்பந்தமாக உலகத் தலைவர்கள் தொடர்பு கொள்கின்ற, # நம்மினத்தின் பிரச்சுனைகளைத் துணிவுடன் நாடாளுமன்றத்தில் மூன்று மொழிகளிலும் முன்மொழிகின்ற ஆற்றல் கொண்ட, # போருக்குப் பின்னர் நம்மினத்தை வழிப்படுத்தி நிற்கின்ற "இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத்தான்" நான் எனது ஆதரவை வெளிப்படையாய்த் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ் மக்களும் மேற் சொன்ன காரணங்களால், இக் கட்சியைத் தேர்ந்தெடுப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம். இதனை நான் சொல்வதால், மாற்றுக் கருத்துள்ள சிலர் என்மேல் கோபம் கொள்ளலாம். "போற்றுவார் போற்றட்டும். புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும்" எனக்கு அதுபற்றிக் கவலையில்லை.

சமுதாயத்திற்கு நன்மையை உரைத்து விட்ட திருப்தி ஒன்றே எனக்குப் போதுமானதாம். எனது வழியைப் பொறுப்புள்ள மற்றைய சமூகப் பிரமுகர்களும் பின் பற்றினால் மகிழ்வேன்.





# பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள் நேற்று வீதிக்கு இறங்கிப் போராட்டம்

யாழ். கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபை அலுவலகச் ஊழியர்கள் சபை முன்றிலில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சபையின் புதிய தலைவர் ஊழியர்களுடன் நடந்து கொள்ளும் அநாகரிகமாக செயற்பாடுகளை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.



இதன்போது, "தேசிய மக்கள் சக்தி அரசே! தகுதயற்ற புதிய தலைவர் நியமனத்தை உடனடியாக இரத்துச் செய்!", "பனை தறித்த காசுதான் ஊழியர்களின் ஊதியமா?", "நிர்வாக திறன் அற்ற பதில் பொதுமுகாமையாளரை உடனடியாக பதிவி நீக்கம் செய்!", "தேசிய மக்கள் சக்தி அரசே! செல்வினின் பதவி நீக்கத்திற்குத் தகுந்த காரணம் கூறு!", "அண்ணன் பதில் முகாமையாளர் ஊழலை மறைக்க தங்கை உள்ளக கணக்காய்வாளர்!", "பனை அபிவிருத்தி சபை ஊழியர்கள் தண்டச் சோறுகளா?", "ஊழலற்ற அரசின் தலைவர் நியமனம் இதுவா?" – என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை கைகளில் ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பி தமது எதிர்ப்பை அவர்கள் வெளிப்படுத்தினர்.

ஜனாதிபதியாக அனுரகுமார திஸாநாயக்க பதிவியேற்ற பின்னர் பனை அபிவிருத்தி சபையின் தலைவராக செல்வின் நியமிக்கப்பட்டார்.

எனினும் அவர் தனது கடமைகளைப் பெறுப்பேற்று சில தினங்களின் அவர் மாற்றப்பட்டு புதிய தலைவராக விநாயக மூர்த்தி சகாதேவன் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நீதிமன்றில் பெண் ஒருவரிடம் 1000 ரூபா பிடுங்கிய சிறை அலுவலர்!

## கைதாகி இப்போது விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(மன்னார் நிருபர்)

மன்னார் நீதிமன்றத்தில் வைத்து லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் வவுனியா சிறைச்சாலை அலுவலர் ஒருவர் நேற்றைய தினம் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வவுனியா சிறைச்சாலை அலுவலர் மன்னார் நீதிவான் நீதிமன்றில் கடமைக்காக வந்துள்ளார்.

சிறைச்சாலை அலுவலர் மன்னார் நீதிமன்றத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரைப் பார்வையிடுவதற்காகச் சென்ற பெண் ஒருவரிடம்




தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபரைப் பார்வையிடுவதற்காக 1000 ரூபா பணத்தைப் பலவந்தமாகப் பெற்றுக் கொண்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் அந்தச் சிறைச்சாலை அலுவலர் பாதிக்கப்பட்ட பெண்ணினால் அடையாளம் காண்பிக்கப்பட்ட நிலையில், சிறைச்சாலை அலுவலரை நீதிவான் நீதிமன்றில் வைத்துக் கைது செய்து விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் குறித்த சிறைச்சாலை அலுவலரை எதிர்வரும் 8 ஆம் திகதி (நாளை) வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அழைப்பிதழ்
மக்கள் மன்றம்
பாராளுமன்ற தேர்தலில்
உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்
தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன?
இடம் : கலைத்தூது மண்டபம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்
காலம் : 09.11.2024 (சனிக்கிழமை)
நேரம் : காலை 9.30 மணி

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில்
பாராளுமன்ற தேர்தலில்
உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்
தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன ?
அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும்,
சிவில் சமூக பிரமுகர்களும் பங்கேற்கும் மக்கள் மன்றம்
இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி

★ சனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் (தமிழரசு)
★ சனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா (சுயேட்சைக்குழு-14)
★ முதுநிலை சட்டத்தரணி ந.சிறிக்காந்தா (ஜ.த.தே.கூ)
★ சட்டத்தரணி வி.மணிவண்ணன் (த.ம.கூ)
★ அருட்தந்தை. ஜெயகுமார் அடிகளார்
★ கலாநிதி.விக்னேஸ்வரன்
முதுநிலை விரிவுரையாளர்
அரசறிவியல் துறை யாழ் பல்கலைக்கழகம்
★ திருமதி.கோசலை மதன்
முதுநிலை விரிவுரையாளர்
சட்டத்துறை யாழ் பல்கலைக்கழகம்

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம்
தொடர்புகளுக்கு : 077 8355 464

வி.எஸ்.சிவகரன்
நெறியாளர்



# வெற்றி பெற்ற ட்ரம்பிற்கு இலங்கை அதிபர் வாழ்த்து

அமெரிக்காவின் 47 ஆவது அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் பதவு ஒன்றை இட்டு ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

"அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ஜே. டிரம்ப் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இலங்கை மற்றும் அமெரிக்க மக்களுக்கு நன்மை பயக்கும் எமக்கிடையிலான உறவிலுள்ள பொதுவான இலக்குகளை அடைவதற்கு உங்களுடன் இணைந்து பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன்." – என்று அந்தச் செய்தி அமைந்துள்ளது.



# ட்ரம்புக்கு ரணிலும் வாழ்த்து

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பின் முயற்சி வெற்றியடையத் தாம் வாழ்த்துகின்றார் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் கணக்கில் அவர் இந்த வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வந்துள்ளார், ஒரு வரலாற்று சாதனைக்கு வாழ்த்துகள் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஜனநாயகக் கட்சியின் குரோவர் கிளீவ்லேண்டின் சாதனையைச் சமன் செய்துள்ளார்.

"அமெரிக்க மக்கள் அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக்க உங்கள் மீதும், ஜே டி வான்ஸ் மீதும் நம்பிக்கை வைத்துள்ளனர். உங்கள் முயற்சிகள் வெற்றியடைய வாழ்த்துக்கள்." என ரணில் தெரிவித்துள்ளார்.

# லஞ்சம் பெற்ற 4 சுங்க அதிகாரிகளுக்கு தலா 35 வருடங்கள் சிறைத் தண்டனை

இலங்கையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் மடக்கப்பட்ட – மிகப் பெரிய இலஞ்சத் தொகை தொடர்பில் – குற்றவாளிகளாகக் காணப்பட்ட நான்கு முன்னாள் சுங்க அதிகாரிகளுக்குத் தலா 35 வருடக் கடூழிய சிறைத் தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று விதித்துள்ளது.

முன்னாள் உதவி சுங்க அத்தியட்சகர் உபாலி குணரத்ன பெரேரா, சுங்க அத்தியட்சகர் வசந்த விமலவீர, சுங்க அத்தியட்சகர் உபாலி செனரத் விக்கிரமசிங்க மற்றும் சுங்க அத்தியட்சகர் சுதீர பராக்கிரம ஜினதாச ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார். 150 கோடி ரூபா பெறுமதியான உதிரி பாகங்களை இலங்கை போக்குவரத்து சபையின் பயன்பாட்டிற்காக வரி ஏய்ப்புபுட இறக்குமதி செய்து விடுவிப்பதற்கு பஞ்சிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் இருந்து 15 கோடி ரூபா இலஞ்சத் தொகை பேசி அதில் பன்னிரண்டரைக் கோடி ரூபாவை ஏற்றுக் கொண்ட சமயம் இவர்கள் பிடிபட்டனர் எனக் கூறப்படுகின்றது.

35 வருட சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக, ஒவ்வொரு குற்றவாளியும் தலா பன்னிரண்டரைக் கோடி ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும் உயர் நீதிமன்ற நீதிபதி நாமல் பலாலே உத்தரவிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.11.2024




உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். என்றாலும் வெற்றி பெற நீங்கள் உற்சாகமாக முயல வேண்டும்.

உங்கள் மதிப்பை உங்கள் மேலதிகாரிகளிடம் நிரூபிக்க வளரச்சியை உண்டாக்கும் புதுமையான யோசனைகள் தேவை. இன்று பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படக் கூடாது. நல்லுறவைப் பராமரிக்க சகஜமான அணுகுமுறையும் அனுசரித்து நடந்து கொள்ளவும் வேண்டும்.

குடும்பத் தேவைக்காக நீங்கள் செலவு செய்ய நேரும். அது தேவையற்ற செலவாக இருக்கும். அதிக செலவு காரணமாக சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று நன்மை தீமை எனப் பலன்கள் கலந்து காணப்படும். இன்று நிச்சயமற்ற தன்மை காணப்படும். முயற்சியில் வெற்றி பெறுவதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.

இன்று கவனக் குறைவு காணப்படும். உங்கள் செயல் திறன் மந்தமாக இருக்கும். பணியின் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது சகஜமாக இருக்க வேண்டும். அவரி கருத்துக்களை கவனமாக கேட்பதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

செலவினங்கள் அதிகமாக காணப்படும். பாதுகாப்பிற்காக சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். உணவு முறையில் கவனம் தேவை. முறையான சிகிச்சையால் விரைவில் குணம் கிடைக்கும்.




இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக இருக்கும். சுப நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாகப் போராட வேண்டும். திட்டமிட்டு நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். அஞ்சாத மன ஆற்றலும் நம்பிக்கையும் கொண்டால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று நீங்கள் பொறுமையுடன் செயற்பட்டால் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும். உங்களுக்கு கொடுக்கப்பட பணிகளைச் செய்யும் போது யோசித்து சிறப்பாக ஆற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை காரணமாக தம்பதியரிடையே கருத்து வேறுபாடு காணப்படும். எனவே நட்பு முறையோடு அணுகினால் நல்லுறவைப் பராமரிக்கலாம்.

இன்று ஏற்படும் கூடுதல் செலவு காரணமாக உங்களுக்கு வருத்தம் ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. செலவுகளை கண்காணியுங்கள்.




முக்கியமான நேரங்களில் நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இது உங்களின் வளர்ச்சியை பாதிக்கும். பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்வது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் மிதமான வளர்ச்சியே காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். இதற்கு நேரம் செலவாகும். உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடனான உறவு சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதிப்பு தரக்கூடிய அத்தகைய உணர்வுகளை தவிர்த்தால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

பணப்புழக்கம் ஏமாற்றத்தை அளிக்கும் விதமாக இருக்கும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் அடிப்படைத் தேவைகளை சமாளிப்பது கூட கடினமாக இருக்கும்.




இன்று நீங்கள் அமைதியின்றி உணர்ச்சி வசப்பட்டு இருக்கும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று சமநிலையோடு இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் மற்றும் வளர்ச்சியை அளிக்கும்.

திறமையாக பணியாற்ற பணிகளை ஆற்றும் போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக, பேசுவதற்கு முன் யோசித்து பேச வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தைக் கையாளும் போது கவனம் தேவை.

உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்ய நேரும். நெஞ்செரிச்சல் காரணமாக உங்கள் தந்தை அவதிப்பட நேரலாம்.




இன்று செழிப்பாக இருக்க நீங்கள் கடுமையாக முயற்சிக்க வேண்டும். இன்று நல்ல பலனடைய அதிர்ஷ்டமான நாள். விரைந்து முடிவெடுத்தல் மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் இது சாத்தியம். இந்து மகிழ்ச்சி கரமான நாளாக இருக்கும்.

இன்று பணியிடத்தில் திருப்தி காணப்படும். உங்கள் திறமைகளை நிரூபிப்பதற்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். இன்று உங்களுக்கு ஊக்கத் தொகை போன்ற வகையில் விரைவாகப் பணம் கிடைக்கும்.




உங்கள் லட்சியங்களை அடைய இன்று சாதகமான நாள். இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது நல்ல பலனைத் தரும்.

புதிய வாய்ப்புகள் உங்களுக்கு நல்ல பலன் தரும். உங்கள் பணிகளை முடிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையோடு பழகுங்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் முக்கியமான விழா பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஸ்திரமாக இருக்கும். சேமிப்பின் மூலம் உங்கள் நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திருப்தியான மன நிலை காரணமாக நல்ல உடல் நிலை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.11.2024




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்றைய கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க தேவையான ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் மனதை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவால்கள் காணப்படும். ஆனால் திட்டமிட்டு செயலாற்றினால் சமாளிக்கலாம். ஈடுபாட்டுடன் பணி செய்தால் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உரையாடும் பொழுது கவனம் தேவை. உங்கள் பிரியமானவருடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற செலவினங்கள் காணப்படுவதால் கவனமாகச் செலவு செய்ய வேண்டும். நிதி வளர்ச்சியில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். பொறுமையுடனும் உறுதியுடனும் நீங்கள் சமாளிக்க வேண்டும். விஷயங்கள் உங்கள் கட்டுப்பாட்டை மீறிக் காணப்படும். அமைதியான அணுகுமுறை கொண்டு கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற இயலாது. சகபணியாளர்கள் ஒத்துழைக்க தவறுவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் வன்மையான போக்கை காண்பித்து கடுமையாகப் பேசுவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய போக்கை கைவிட வேண்டும்.

வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நிதி நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் வங்கியிருப்பை பராமரிப்பது கடினமாக உணர்வீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

இன்று வளர்ச்சி காணப்படுகின்றது. பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். திட்டமிடுவதன் மூலம் திறமையாகப் பணியாற்றலாம்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்குமிடையிலான உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவிலான கடன்கள் வாங்குவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது.




உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு இன்று சாதகமான நாள். இன்றைய நாளின் செயல்களை நீங்கள் எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் செய்வீர்கள். சமயோஜித புத்தியின் மூலம் செயல்படுவதால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியின் செயல்திறனில் வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்புடன் பழகுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை காரணமாக உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்களின் கடின உழைப்பின் மூலம் .ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் சில கூடுதலான பணம் பெறுவீர்கள்.

அமைதியான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park